1994 ஏப்ரல் 27]

417—

கிணத்துக்கடவு தொகுதி, சேரிபாளையம் அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்களை கல்வித் துறைக்குச் சொந்தமாக்குதல்

* *11071—திரு நா. சா. பழனிசாமி:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிணத்துக்கடவு தொகுதி, சேரிபாளையம் அரசு உயர்நிலைப்பள்ளி இயங்கிவரும் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான கட்டிடங்களை கல்வித் துறைக்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) புதுக்கோட்டையில் சத்துணவு ஊழியர்களின் ஊர்வலத்தில் போலீஸ் தடியடிப் பிரயோகம் செய்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் வே. தம்புசாமி, மற்றும் ஜி. பழனிசாமி ஆகியோர், புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டையில் 25-4-1994 அன்று தங்களது கோரிக்கையை முன்வைத்துப் போராட்டம் நடத்திய சத்துணவு ஊழியர்களின் ஊர்வலத்தில் போலீஸ் தடியடிப் பிரயோகம் நிகழ்ந்ததாக ஒரு பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று என்னிடத்திலே அனுமதி கோரியிருக்கிறார்கள். நான் அனுமதி அளித்து இருக்கிறேன். இதுபற்றிச் சுருக்கமாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கேட்டுக் கொள்கிறேன். திரு. வே. தம்புசாமி.